

# சனநாயக மக்கள் சமூகம் 07

சனநாயக வாழ்க்கை என்பது மக்கள் மக்களுக்காக வாழ்வதாகும். ஒருவரை ஒருவர் மதித்து வாழல் சிறப்பானது. மனிதன் சமூகப்பிராணி என்ற வகையில் அவனால் தனித்து வாழமுடியாது. சேர்ந்து வாழும் பண்பு அவனிடத்தில் இயல்பாகவே உண்டு. சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பிறரது உதவியும், உபசாரமும் மிகவும் அவசியமானதாகும். சமூகத்தில் மனிதர்களது செயற்பாடுகள் பல்வேறுவிதமாக அமைந்து காணப்படுகின்றன. வேற்றுமைகளைக் கொண்ட பரந்த சமூகத்தில் மனிதன் அவனது விருப்பம் போல வாழ முடியாது. சமூகத்திலுள்ள ஏனையோர்களது கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இதற்காகச் சமூகத்தில் நிலவுகின்ற பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், சட்டதிட்டங்கள் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும். இதன் மூலம் மக்கள் சமூகத்தின் நடைமுறையினை விளங்கிக் கொண்டு செயற்படலாம். எனவே இப்பாடத்தைக் கற்பதன் மூலம் உங்களுக்கு சனநாயக வாழ்க்கை முறையை விளங்கவும், அதன் முக்கிய பண்புகளை அறிந்துகொள்ளவும் முடியும் அத்துடன் குடும்பம், பாடசாலை என்பவற்றிலுள்ள சனநாயகப் பண்புகள் பற்றியும் சமூகத்தின் பிரசைகள் என்ற வகையில் சிறுவர்களது உரிமை, கடமைகள் பற்றியும், சமூகத்தின் முன்னேற்றத்திற்கு சனநாயக வாழ்க்கை முறை உதவும் விதம் குறித்தும் விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## 7.1 சனநாயக வாழ்க்கை முறையின் பண்புகள்

### ✶ சனநாயக வாழ்க்கை முறை

சனநாயக வாழ்க்கை முறை என்பது மக்கள் மக்களுக்காகவே வாழுவதாகும், சனநாயகம் பற்றிய சிந்தனை ஒரு சிறந்த வாழ்க்கை முறையாகவும், அங்கீகரிக்கப்பட்ட முறையாகவும் விளங்குகிறது. அதாவது சமூகத்தில் வாழும் ஒவ்வொரு பிரசையும் சகல வழிகளிலும் ஒருவரை ஒருவர் மதித்து பரஸ்பரம் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ்வதே சனநாயக வாழ்க்கை எனப்படும். மேலும், சமத்துவம், பரஸ்பரம் ஒத்துழைத்தல், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றைப் பின்பற்றுவதன் மூலம் ஒவ்வொரு தனியாளும், சமூகத்திலுள்ள அனைவருடனும் ஒன்றிணைந்து வாழ முடியும்.



உரு 7.1 சிரமதானம்




உரு 7.2 ஒவ்வொருவருக்கும் உதவுதல்

இங்கு தனது நலன்களில் மட்டும் அக்கறை கொள்ளாது, பிறர் நலன்களில் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் வாழ்வதே முக்கியமான பண்பாகும்.

## ✶ சனநாயக வாழ்க்கை முறையின் பண்புகள்

சனநாயக வாழ்க்கை முறை ஒன்றினுள் காணப்படக்கூடிய முக்கிய பண்புகளாக பின்வருவனவற்றை நாம் அடையாளப்படுத்தலாம்.



மேற்படி உருவின் மூலம் சனநாயக வாழ்க்கை முறைக்கு மிகவும் அவசியமான பண்புகள் எவையென்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இவற்றை எமது வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொண்டு வாழும்போது நாம் சமூகத்தில் மதிப்புள்ள, சிறந்த பிரஜையாக விளங்கலாம்.

**செயற்பாடு I**

01. ''சனநாயக வாழ்க்கை முறையின் பண்புகள் '' என்னும் தலைப்பில் பாடசாலைச் சுவர்ப்பலகைக்கு ஆக்கம் ஒன்றை வரையவும்.

02. சனநாயக வாழ்க்கை முறையின் பண்புகளை சமூகத்தில் பாது காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்துத் தெளிவுபடுத்தவும்.

## 7.2 சனநாயக வாழ்க்கை முறையின் பண்புகள்

சனநாயக வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்ட சமூகமானது தனிச்சிறப்பு மிக்கதாகும். அங்கு பின்வரும் முக்கிய பண்புகள் காணப்படும். இவை சமூக மேம்பாட்டுக்கு உதவுகின்றன.

- சுயகட்டுப்பாடு
- சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்
- பேச்சு வார்த்தையும் இணக்கப்பாடும்

ஆகியன பிரதான பிரிவுகளாகும்

**✶ சுயகட்டுப்பாடு**

சுயஒழுக்கத்துடன் வாழுதல் சனநாயக சமூகத்தில் காணப்படக்கூடிய முக்கிய பண்பாகும். சுயஒழுக்கத்துடன் வாழுதல் என்பது ஒருவர் தம்மை தாம் வாழுகின்ற சமூகத்திற்குப் பொருத்தமாக மாற்றுவது என்று பொருள் கொள்ள லாம் சரி பிழைகளை அறிந்து கொண்டு எண்ணங்களைக் கட்டுப்படுத்திச் செயற்படுதலை இது குறிக்கிறது. சுயஒழுக்கத்துடன் வாழும் ஒருவர் எப்போதும் மதிக்கப்படக் கூடியவராவார்.

தாம் செய்யும் செயல்கள் தொடர்பாகச் சுயமாக ஆராய்ந்து, குடும்பம் பாடசாலை மற்றும் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாயங்கள், வழிமுறைகளின் படி அவர் வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்.

சுய ஒழுக்கமின்றி வாழும் போது அது எமக்கும் சமூகத்துக்கும் பாதிப்பு ஏற்படக் காரணமாவதோடு இது திடீர் ஆபத்துக்களை உருவாக்குவதற்கும் பாதைகளில் தடைகளை ஏற்படுத்துவதற்கும் பிறரை மதிக்காது நடந்துகொள்வதற்கும் கூடக் காரணமாகலாம்.



உரு 7.3 பஸ் வண்டியில் வரிசையாக ஏறும் பிரயாணிகள்

மேலுள்ள உருக்களில் சுய ஒழுக்கத்துடன் செயற்படும் மக்களைக் காணலாம். இவ்வாறு நாம் எமது வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுயஒழுக்கத் துடன் செயற்பட வேண்டியுள்ளது. சுயஒழுக்கத்தை இழந்தவருக்கு தமது வாழ்க்கையின் குறிக்கோள் களை அடைய முடியாது போகின் றது. சுயகட்டுப்பாட்டு ஒழுங்குடன் செயற்படல் தனிப்பட்டோருக்கும் சமூகத்திலுள்ள ஏனையோருக்கும் பயனுள்ளதாகும். சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்துவதன் மூலம் கட்டுப்பாடான வாழ்வுக்குரிய சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கும், பிறருடன் சிறந்த தொடர்புகளைப் பேணுவதற்கும், ஏனையவர்களது நல்லாசிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இயலுமாய் இருக்கும்.

### ✶ சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்

மனிதனிடத்தில் பல்வேறுபட்ட பண்புகள் காணப்படுகின்றன. உடல்ரீதியான பண்புகள், கலாசாரப் பண்புகள் என்பவற்றை அவதானிக்கலாம் இந்த வேறுபட்ட பண்புகளை முறையாகப் பாதுகாப்பதன் மூலம் சமூகத்தைப் பேணுவதற்குச் சட்டங்கள் துணைபுரிகின்றன. சட்டங்களின் மூலம் மனிதர்களின் சமூக நடத்தைகள் பாதுகாக்கப்படுவதுடன், அவர்களின் வெளி நடத்தைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

சட்டங்கள் பற்றிய அடிப்படை அறிவை மனிதர்கள் முதலில் குடும்பத்திலிருந்தே பெறுகின்றனர். நீண்டகாலமாகப் பின்பற்றப்படும் குடும்பப் பழக்க வழக்கங்கள் குடும்பச் சட்டங்கள் என்ற அந்தஸ்த்தைப் பெறுகின்றன.

பெற்றோரின் அனுமதியின்றி வீட்டுக்கு வெளியே செல்லாதிருத்தல், பெற்றோரின் அழைப்புக்குச் செவிமடுத்தல், பெற்றோரின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளல், குடும்ப மரபுகளைப் பாதுகாத்தல், பெற்றோருக்கு வேலைகளின் போது உதவுதல் போன்றன இதனுள் அடங்குகின்றன.

இவ்வாறு குடும்பத்திலிருந்து தோன்றுகின்ற அடிப்படைக் கருத்துக்கள் பின்பு சமூகத்தின் செயற்பாடுகளுக்குத் தேவைப்படுவனவாக அமைகின்றன.

சட்டங்களை மதித்து நடத்தல், சட்டத்திற்கு மதிப்பளித்தல், என்பது சட்டத்திட்டங்களுக்கு கீழ்ப்படிந்து செயற்படுவது ஆகும். சனநாயக சமூகத்தின் ஒவ்வொரு பிரசையும் சட்டங்களை மதித்து நடத்தல் அவசியமானது.

குடும்பத்தினுள் சட்டம் மற்றும் சட்டத்திற்குக் கீழ்ப்படிதல் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ளும் பிள்ளை அடுத்து பாடசாலையுடன் தொடர்பு படுகின்றது. பாடசாலையிலும் பல்வேறு ஒழுங்கு விதிகள் காணப்படும். பாடசாலையை நடத்துதல், மாணவர்களின் பாதுகாப்பு, பாடசாலையின் நோக்கங்களை அடைவது தொடர்பாக அத்தகைய சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் அவசியமாகும். உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு வருதல், பாடசாலையை விட்டு வெளியேறுதல், பாடசாலை நேரத்தில் கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்றுதல், சீருடையை அணிந்து வருதல், அனுமதியின்றி வகுப்பறையிலிருந்தோ பாடசாலையிலிருந்தோ வெளியே செல்லாதிருத்தல், நேரசூசிக்கேற்ப பாடங்களைப் பயிலுதல், பாடங்களைக் கற்பதற்கு மேலதிகமாக விளையாட்டு மற்றும் ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், விளையாட்டுகளில் பங்குபற்றி அவற்றின் சட்டத்திட்டங்களை விளங்கிக் கொள்ளுதல் ஆகியன இவற்றுள் அடங்குகின்றன.




**உரு 7.4 வீதிச் சட்டங்களை மதித்து நடத்தல்**

சட்டத்திற்குக் கீழ்ப்படியும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விளையாட்டுக்களும் எமக்குப் பெரு மளவில் துணைபுரிகின்றன. நடுநிலையாகச் செயற்படவும், போட்டி நடைபெறும் வழிமுறை தொடர்பாக அறிந்து கொள்ளவும் அதனுள் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. எனவே சுயகட்டுப்பாட்டுடனும், சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதற்கும் உரிய பயிற்சி பாடசாலை மூலமாகவே எமக்குக் கிடைக்கின்றது என்பதை இதிலிருந்து விளங்கியிருப்பீர்கள்.

மேலும் பிரஜை என்ற வகையில் சமூகத்தில் வாழுகின்ற அங்கத்தவர்கள் சமூகத்தில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சட்டதிட்டங்கள், அவை செயற்படுத்தப்படும் விதம் குறித்து

தெரிந்து வைத்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் மூலம் சமூகத்தை நடாத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சட்டதிட்டங்கள் பற்றியும் அறிந்திருப்பது அவசியமானது. சட்டதிட்டங்களை மீறுவதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் குறித்தும் அவதானம் தேவை, சமூகத்தினுள் வேலைகளில் ஈடுபடுகின்றவர்கள் கீழே காணப்படும் காரணங்களுக்காகச் சட்டத்திற்கு கீழ்ப்படிவதனை நீங்கள் அறிந்து கொள்ளலாம்:

- சட்டம் சமூகத்தில் நல் ஒழுங்கினை ஏற்படுத்துவதனால்
- சட்டம் சமூகத்திலுள்ள எல்லோருக்கும் பொதுவானதாக இருப்பதனால்
- சட்டம் பிரஜைகளின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பால்
- சட்டத்தை மீறும்போது சமூகத்தில் கௌவரம் இழக்கப்படுவதனால்
- சட்டத்தை மீறினால் தண்டனையுண்டு என்ற பயத்தினால்
- சட்டம் தனிப்பட்டோரின் பாதுகாப்பை உறுதி செய்கின்றமையால்

மேற்படி காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது சனநாயக பிரஜைகள் என்ற வகையில் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது ஒவ்வொருவரதும் பொறுப்பும், கடமையுமாகும். அதுவே நாட்டின் நிலைத்திருத்தலுக்கும் காரணமாகும். சட்டங்களை மதிக்காது வாழ்வது தமக்கு மாத்திரமன்றி ஏனையோருக்கும் இடையூறு தருவதலால் சட்டத்திற்கு மதிப்பளித்து கீழ்ப்படிந்து செயற்பட வேண்டியுள்ளது.

**சட்டங்களினுள் காணப்படக்கூடிய பொதுவான பண்புகளாகப் பின்வருவன அமைந்துள்ளன.**

- சட்டம் எல்லோருக்கும் பொதுவானதாக இருத்தல்.
- சட்டங்களுக்கு முறையான நீதிமன்றங்களே விளக்கமளித்தல்.
- சட்டங்கள் தண்டனைகள் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்படுதல்.
- சட்டதிட்டங்கள், விதிகள் மிகவும் வெளிப்படையானதாக இருத்தல்.
- சட்டங்கள் சமூகத்தின் சிறந்த நோக்கங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல்.
- மாற்றமடையும் சமூக நிலைமைகளுக்குப் பொருந்தக்கூடியனவாக இருத்தல்.

### ✶ பேச்சுவார்த்தையும் இணக்கப்பாடும்

பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கப்பாட்டுக்கு வருதல் சனநாயக மேம்பாட்டுக்கு அவசியமானதொரு பண்பாகும். பேச்சுவார்த்தை மூலம் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் பல கருத்துக்கள், ஆலோசனைகள் முன்வைக்கப்படும். இங்கு சுதந்திரமாகக் கலந்துரையாடி முடிவுக்கு வருகின்ற நிலை முக்கியமானது. தமது கருத்துக்களைத் தடையின்றி வெளிப்படுத்து வதற்குள்ள உரிமை பயன் மிக்கது. எமக்கு கருத்து வெளியிடவும்,

கலந்துரையாடவும் முடியாதிருந்தால் அது சனநாயக சமூகத்தின் பண்பன்று சுதந்திரமாகவும், திறந்த அடிப்படையிலும் கலந்துரையாடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு இணக்கத்திற்கு வருவது சனநாயக சமூகத்தில் அமைதியும், ஒற்றுமையும் உருவாகக் காரணமாகும்.



**உரு 7.5 கலந்துரையாடி முடிவு செய்தல்**

சனநாயகப் பண்புள்ள சமூகத்தில் வாழுவோர் பல்வேறு வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவர். விவாதங்களும், கருத்துக்களும் சேரும்போதே உண்மை வெளிவர முடியும். கருத்துகளும் வாதப் பிரதிவாதங்களும் தடுக்கப்படும் போது உண்மைகள் வெளிவரமாட்டா. பேச்சுவார்த்தையின் போது சகல தரப்பினரது கருத்துக்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுவது முக்கிய இயல்பு ஆகும்.

எக்காரணம் கொண்டும் எதிர்க்கருத்துக்கள், சந்தேகங்கள், விமர்சனங்கள் மறுக்கப்படவோ, அல்லது தடைசெய்யப்படவோ கூடாது. எந்த விடயத்தையும் சுதந்திரமாகப் பேசித்தீர்க்கும் பண்பு தனிப்பட்டோருக்கும் சமூகத்துக்கும் மற்றும் முழு நாட்டுக்கும் பயன்மிக்கதாகும்.

பேச்சுவார்த்தை மூலமாக இணக்கம் காண்பது மிகவும் சரியான தீர்மானத்தை மேற்கொள்வதற்குக் காரணமாகலாம். பேச்சுவார்த்தையின் போது பெரும்பான்மையினரின் அபிப்பிராயங்களுக்கு மட்டுமன்றி உண்மையான கருத்துக்கள் அவதானத்துடனும், ஒழுங்குடனும் பரிசீலிக்கப்படுகின்றன. ஆகவே பேச்சுவார்த்தை அல்லது கலந்துரையாடல் மூலம் சகிப்புத்தன்மை, மதிப்பளித்தல், அலசி ஆராய்தல், உண்மைகளை ஏற்றுக் கொள்ளுதல், எதையும் வற்புறுத்தாத தன்மை போன்ற பண்புகள் ஏற்படுவதனால் அவை சனநாயக சமூக மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

## செயற்பாடு II

01. சுயகட்டுப்பாடு இன்மையினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து "குறு நாடகம்" ஒன்றை ஆயத்தமாக்கி நடித்துக் காட்டுக.
02. ''பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாட்டுக்கு வருவதனால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம்'' எனும் கருத்தை வெளிப்படுத்தக்கூடிய சிறுகதை ஒன்றை எழுதுக.
03. ''சட்டத்திற்கு கீழ்ப்படிதல் சிறந்த பிரசைகளது பண்பாகும்.'' எனும் தலைப்பில் குழுவாகச் செயற்பட்டுக் கலந்துரையாடுக.

# 7.3 குடும்பத்திலும், பாடசாலையிலும் அவதானிக்கக்கூடிய சனநாயகப் பண்புகள்

## ✶ குடும்பத்தின் சனநாயகப் பண்புகள்

சனநாயகமானது குடும்பத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. குடும்பம் சமூகத்தின் அடிப்படையான அமைப்பு ஆகும். சமூக நிறுவனங்களில் மிகச் சிறந்தாகவும் அது விளங்குகின்றது. தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோர் அடிப்படை அங்கத்தவர்களாவர். அவர்களை விட பாட்டி, பாட்டா, சிறியதந்தை, சிறியதாய், மாமா, மாமி போன்றோரும் எமது குடும்பத்துடன் தொடர்புபட்டுக் காணப்படுவர். நல்ல தொடர்பும், உறவும் குடும்ப வாழ்வுக்கு அவசியமாகின்றது.

பொதுவாகக் குடும்பத்திலும் அநேக சனநாயகப் பண்புகள் நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| அரவணைப்பு | அன்பு | பாதுகாப்பு |
| சுதந்திரம் | ஒற்றுமை | பணிவுடைமை |
| விட்டுக்கொடுப்பு | சமத்துவம் | ஒத்துழைத்தல் |
| உதவிபுரிதல் | மதித்தல் | முடிவெடுத்தல் |
| உணர்ச்சிவசப்படாமை | | |

மேற்படி பண்புகள் குடும்பத்தில் காணப்படுவதனை நீங்கள் அறிவீர்கள். குடும்பத்தில் காணப்படக் கூடிய முக்கிய இரு சனநாயகப் பண்புகளாக அன்பும் அரவணைப்பும் காணப்படுகின்றன. பெற்றோரிடமிருந்துதான் இவை கிடைக்கப்பெறுகின்றன. பெற்றோரின் வேண்டுகோள்களை ஏற்பதும், பிள்ளைகளின் கருத்துக்களைப் பெற்றோர் ஏற்கும் தன்மையும் குடும்பத்தில் காணப்படும்.

பெற்றோர்களால் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளால் பெற்றோருக்குச் செய்யப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும் உள்ளன. இவற்றைச் சரிவர நிறைவேற்றும் போது பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான உறவு நெருக்கமடைவதுடன் குடும்பம் சனநாயகப் பண்புள்ளதாகவும் மாற்றமடையும்.



உரு 7.6

பிள்ளைகளாகிய எமக்கு சனநாயகப் பண்புகள் பற்றிய அடிப்படை அனுபவம் குடும்பத்தில்தான் கிடைக்கின்றது.

தந்தையின் தலைமைத்துவத்தை ஏற்றல், பெற்றோரது கருத்துக்களைச் செவிமடுத்தலும் மதிப்பளித்தலும், உணர்ச்சிவசப்படாமை போன்ற சிறந்த சனநாயகப்பண்புகள் குடும்ப அலகுகளில் காணப்படுகின்றன. குடும்பத்தில் எமக்குக் கிடைக்கும் அன்பும், பாசமும் வாழ்க்கையில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.



**உரு 7.7**

சிறந்த பிள்ளைகள் பெற்றோரின் மனம் பாதிக்கும் வகையில் எதையும் கூற மாட்டார்கள். கதைக்க வேண்டிய எல்லா விடயங்களையும் அவர்களுடன் நல்லமுறையில் கலந்துரையாடுவர்.

பெற்றோர் கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வர் அதன்படியே இறுதித் தீர்மானத்துக்கும் வருவர். ஒளிவு மறைவின்றிக் கதைத்துப் பேசக்கூடிய இடம் குடும்பமாகும். ஏதாவது விடயங்களைச் செய்வதற்கு முன் நீங்களும் உங்கள் பெற்றோர்களுடன் கலந்து பேசியது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? மேலும் எந்தவிடயமானாலும் இணக்கத்துடனும் ஒத்துழைப்புடனும் செய்வதற்குரிய சக்தி குடும்பத்தில் கிடைக்கின்றது. வீட்டில் வேலைகளைத் தமது வேலைகளாகக் கருதி அனைவரும் பங்கேற்றுச் செய்ய வேண்டும். குடும்பம் சிறந்து விளங்குவதற்காகத் தம்மால் முடியுமானதைச் செய்வது சிறந்த குடும்ப உறுப்பினரது கடமையாகும்.




**உரு 7.8 ஒழுங்காகக் காணப்படும் வீட்டு அறையின் தோற்றம்**

குடும்பத்தில் நடக்கும் நற்காரியம் எமது நற்காரியமாகும். எனவே குடும்பத்தின் சிறப்புக்கு உழைப்பது எங்களது பொறுப்பாகும். நீங்களும் ஒரு குடும்ப உறுப்பினர் என்ற வகையில் வீட்டுச்சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல், உரிய இடங்களில் பொருட்களை வைத்துப் பராமரித்தல், விரோதமனப்பாங்கை நீக்கிச் சகிப்புத் தன்மையைக் கையாளுதல் போன்ற வற்றை மேற்கொள்ள வேண்டுமல்லவா? குடும்பத்தில் காணப்படக் கூடிய மற்றொரு சனநாயகப் பண்பு சுதந்திரமாகும். எந்த விடயத்தையும் சுதந்திரமாகக் குடும்பத்தில் பேசித்தீர்மானிக்கலாம். எமது செயற்பாடுகளைத் தடைகளின்றிச் செய்வதற்குரிய சுதந்திரம் குடும்பத்தினுள் கிடைக்கின்றது.

நீங்கள் உங்களது வீட்டில் பெற்றோர், உறவினர்களின் அரவணைப்புக் காரணமாக அதிக சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்கிறீர்கள்.

முழுமையான சுதந்திரத்தைப் பெறும் போதே வாழ்க்கையும் சிறப்பாக அமையும். சுதந்திரத்தை நாம் குடும்பத்தில் அனுபவிப்பதற்கு அமைதியும், ஒற்றுமையும் நிலவுவது அவசியம். சுதந்திரம் இருந்தால் தான் எமது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதை இதிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

**✶ பாடசாலையின் சனநாயகப் பண்புகள்**




உரு 7.9

குடும்பத்திற்கு அடுத்ததாக நாம் மிகவும் தொடர்பினை ஏற்படுத்தும் இடம் பாடசாலையாகும். எமது செயற்பாடுகளை அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்து கொண்டு உலகினை விளங்கிக் கொள்ளும் தளமாகவே பாடசாலை உள்ளது. குடும்பத்தில் போன்று பாடசாலையிலும் பல சனநாயகப் பண்புகள் காணப்படுகின்றன. உரு 7.9 இனை அவதானிப்பதன் மூலம் சில முக்கிய பண்புகளை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

சனநாயகப் பண்புகளை முறையாக வளர்த்துக் கொள்வதற்குரிய வாய்ப்பு பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள், பொது நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்றவற்றில் பங்குபெறுவதன் மூலம் மாணவர்களாகிய எமக்குக் கிடைக்கப் பெறுகிறது.

வெவ்வேறு குடும்பங்கள், மற்றும் சமூகங்களிலிருந்து வரும் மாணவர்கள் ஒற்றுமையுடனும் சமத்துவத்துடனும் பாடசாலையில் செயற்படுவர். பாடசாலையின் ஒழுங்கு விதிகளை ஆசிரியர்களும் மாணவர்களும் பின்பற்றி நடப்பர். பாடநூல்கள் வழங்குதல் வகுப்பறை வசதிகளை வழங்குதல் விளையாட்டுக்களில் பங்குபற்றுதல் என்பவற்றில் சகல மாணவர்களும் சமத்துவமாக நடத்தப்படுவர்.

பாடசாலையில் மாணவர்களுக்கு பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, தலைமைத்துவம் வழங்கப்படுகின்றது. அதனைக் கொண்டு நடத்தவும் அல்லது கட்டுப்பட்டு நடக்கவும் நாம் பழகுகின்றோம். இவ்வாறு சமூகத்துக்குப் பொருத்தமான அநேக சனநாயகப் பண்புகள் பாடசாலைச் சமூகத்தில் காணப்படுகின்றன.

இப்பண்புகளிலிருந்து மாணவர்களாகிய நாம் பயன்பெறவேண்டியது அவசியமாகும். நாளை நல்ல சமூகப் பிரஜையாக உருவாகுதற்கு பாடசாலையில் சனநாயகப் பண்புகளைப் பின்பற்றி வாழுகின்ற கடமை எம்மீது காணப்படுகின்றது.

**செயற்பாடு III**

01. உங்களது குடும்பத்தில் நீர் அவதானிக்கக் கூடிய சனநாயகப் பண்புகளைத் தொகுத்து எழுதுக.
02. பாடசாலையில் காணப்படக் கூடிய என்னென்ன சனநாயகப் பண்புகள் வாழ்வுக்கு ஏன், அவசியம் என்பதை விளக்குக.

## 7.4 சிறுவர்கள் என்ற வகையில் சமூகத்தில் எமது உரிமைகளும் கடமைகளும்

பெற்றோரின் உத்தமமான சொத்துகள் பிள்ளைகளாவர். பெற்றோருக்கு மாத்திரமன்றி நாட்டினது மூல வளமாகவும் சிறுவர்கள் விளங்குகின்றனர். நடைமுறைச் சமூகத்தின் எதிர்காலச் சொத்தான சிறுவர்களைப் பேணிப் பாதுகாப்பது சமூகத்திலுள்ள அனைவரதும் கடப்பாடாகும். சமூகத்தில் அதிக அக்கறையைச் சிறுவர்கள் மீதுதான் செலுத்தவேண்டியுள்ளது. எனவே பிள்ளைகளை ஊட்டி வளர்த்தல், அரவணைத்தல், தம்மை விருத்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன மூத்தோரது கடமைகளாகும்.

சமகாலத்தில் சிறுவர்கள் என்போர் பதினெட்டு வயதிலும் குறைந்த இளைய பருவத்தினராவர். அப்படியானால் 8 ஆந் தரத்தில் பயிலும் நீங்களும் சிறுவர் என்பதற்குள் உள்ளடங்குகின்றீர்கள். வளர்ந்தோரைப் போன்று சிறுவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்றாலும் சிறுவர்கள் மீதான உரிமைகளும், கடமைகளும் தனித்துவமானவையாகும்.

சிறுவர்களது உரிமைகள், கடமைகள் தொடர்பாக நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. எனினும் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதன் பின்பே மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் குறித்து அதிக கவனம் திரும்பியது. 1948 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பிரகடனம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சிறுவர் உரிமைகள் தொடர்பான சிறுவர் உரிமைகள் சமவாயம் 1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் நிறைவேற்றப்பட்ட பின்பே சிறுவர்கள் குறித்த கவனம் உலகளாவிய ரீதியில் விரிவடைந்தது. அவற்றை அடிப்படையாகக் கொண்டே எமது நாட்டிலும் 1992 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான தேசிய சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக சிறுவர்களின் நலன்களைக் கவனிக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு யுனிசெப் ஆகும். அதன் இலச்சினயே அருகில் காணப்படுகிறது.

**உரு 7.10 யுனிசெப் சின்னம்**

சிறுவர்களின் உரிமைகள் சமவாயத்தின் படி ஆண், பெண் வேறுபாடின்றி எல்லாச் சிறுவர்களும் பொதுவாக நோக்கப்படுவது அவசியம். சிறுவர்களது செயற்பாடு, பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் பங்குபற்றல் ஆகிய அடிப்படைகளைக் கொண்டே சிறுவர்களது உரிமைகள் நோக்கப்படுகின்றன.

சிறுவர் உரிமைகளுடன் இணைந்த மற்றுமொரு அம்சமாக சிறுவர்களது கடமைகள் விளங்குகின்றன. உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று ஒன்றுபட்டவையாகும். ஒவ்வொரு உரிமையின் பின்னணியிலும் கடமைகள் காணப்படுகின்றன. சிறுவர்களின் சிறப்பான வாழ்க்கைக்கும் சமூகத்தின் தொழிற்பாட்டுக்கும் இவ்வுரிமைகளும் - கடமைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே மாணவர்களாகிய நீங்கள் உங்களது கடமைகளைச் செய்வதன் மூலம் உங்களது உரிமைகளை அனுபவிக்கலாம்.

சிறுவர்களாகிய நீங்கள் பிறந்த நாள் முதல் உங்களுக்குள்ள உரிமைகளையும், கடமைகளையும் நீங்கள் தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும். பின்வரும் அட்டவணையின் மூலம் சிறுவர்களின் உரிமைகளும் - கடமைகளும் காட்டப்பட்டுள்ளன.

## ✶ சிறுவர்களின் உரிமைகள்

- உயிர்வாழ்வதற்கான உரிமை
- நலன்களையும் பெற்றோரின் பராமரிப்பையும் பெறுவதற்கான உரிமை
- பெற்றோருடன் வாழுவதற்கும் அவர்களுடன் உறவுகளைப் பேணுவதற்குமான உரிமை
- சுகாதாரத்தையும் சுகாதாரப் பராமரிப்பையும் பெறுவதற்கான உரிமை
- விளையாட்டு, பொழுது போக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றும் உரிமை
- பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
- சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் உரிமை
- பாலியல் துஷ்பிரயோகம் போதைப் பொருள் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
- கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை
- சித்திரவதை, இழிவான நடத்தைகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
- சிந்தனை செய்வதற்கும் மனச்சாட்சியைப் பின்பற்றுவதற்குமான உரிமை
- சமய, கலாசார வழிமுறைகளை அனுபவிப்பதற்கான உரிமை
- வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான உரிமை

## ★ சிறுவர்களின் கடமைகள்

பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடத்தல்

↓

குடும்பத்தினரையும், அயலவர்களையும் நேசித்தல்

↓

ஆரோக்கியமாக வாழுதல்

↓

தலைமைத்துவத்துக்குக் கீழ்ப்படிதல்

↓

நண்பர்களுடன் ஒற்றுமையாகப் பழகுதல்

↓

ஆசிரியர்களுக்கு மரியாதை செய்தல்

↓

சமூகத்தில் மூத்தோர்களை மதித்தல்

↓

நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழுதல்

வலது குறைந்தோருக்கு உதவி செய்தல்

↓

குற்றச் செயல்களில் ஈடுபடாதிருத்தல்

↓

சுற்றாடலைப் பாதுகாத்தல்

↓

பிராணிகள், உயிரினங்கள் மீது இரக்கம் காட்டுதல்

↓

பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்துப் பராமரித்தல்

↓

சட்டங்களையும், சம்பிரதாயங்களையும் மதித்தலும், அவற்றைப் பின்பற்றலும்

↓

சமூக முன்னேற்றத்தில் பங்கெடுத்தல்

இவ்வாறு சிறுவர்களாகிய எமக்கு உரிமைகளும், கடமைகளும் காணப்படுகின்றன. உரிமைகளுடன் வாழுகின்ற போதே எமது வாழ்வு சிறப்பாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

**செயற்பாடு IV**

01. கீழ்க் காணப்படும் இடங்களில் சிறுவர் உரிமைகள் நடை முறைப்படுத்தப்படும் விதம் குறித்தும் அவற்றில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் விளக்குக.

(அ) பாடசாலை (ஆ) குடும்பம்

(இ) வீதிகள் (ஈ) பயணிகள் வாகனங்களில்

02. சிறுவர் உரிமைகள் மீறலுக்குள்ளாவதிலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## 7.5 சமூகத்தின் நிலைத்திருத்தலுக்குச் சனநாயக வாழ்க்கை முறையின் அவசியம்

சமூகம் சிறப்பாக இயங்குவதற்கும், நிலைத்திருப்பதற்கும் சனநாயக வாழ்க்கை முறையே காரணமாகின்றது. சனநாயகப் பண்புள்ள சமூகத்திலிருந்தே சிறந்த பிரஜைகள் உருவாக்கின்றனர். பின்பு அவர்கள் சமூக அபிவிருத்திகளில் பங்கேற்கவும் செய்கின்றனர். சமூகப்பற்றுள்ள, அக்கறையுள்ளவர்களை உருவாக்குவதே இதன் இறுதி இலக்காகும்.

சனநாயக அபிவிருத்திக்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான மக்களின் அமைப்பு 8ஆம் தரத்தில் கல்விக்கற்கும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ''சனநாயக வாழ்க்கை முறை'' எனும் கருப்பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் ஆக்கங்களிலிளிருந்து சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்தறிந்து சமூகத்தின் நிலைத்திருத்தலுக்கு சனநாயக வாழ்க்கை முறையின் அவசியம் குறித்து நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

### ✶ நபர்களிடையே உறவுகளைக் கட்டியெழுப்புதல்

குடும்ப உறவினர்களிடையே சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குச் சனநாயக வாழ்க்கை முறை பற்றிய மனப்பாங்கு உள்ளவர்களுக்கே முடியும். தமது குடும்பத்திலுள்ளவர்களுக்குச் செய்ய வேண்டியுள்ள கடமைகளைச் சரிவரச் செய்து அவர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். தமது வெற்றிக்காக மாத்திரமன்றி முழுக்குடும்பத்தினதும் வெற்றிக்கும் முன்னேற்றத் திற்கும் இதன் மூலம் பங்களிப்புச் செய்யலாம்.

சனநாயக வாழ்க்கைமுறையை விளங்கிக் கொண்டவர்கள் தமது குடும்பத்தின் பாதுகாப்புத் தொடர்பாக அவதானத் துடன் வாழ்வர். குடும்ப உறவினர் களிடையே கருத்துக்களைப் பரிமாறுதல் மிகவும் சிறப்பாக இடம்பெறும்- நடவடிக் கைகள் தொடர்பாகத் தீர்மானங்களை மேற்கொள்ளவும் செய்வர். குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு நடைமுறைச் சமூகத்துக்குப் பொருத்தமான நவீன பிரசைகளாகத் தம்மை ஆக்கிக் கொள்வர். அவர்களின் மூலம் உறவினர் களுக்கும் சமூகத்தவர்களுக்கும் புரிய வேண்டிய கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அக்கறையுடன் செயற்படுவர். சந்தர்ப்பத்திற்கேற்பவும், குடும்பத்தவர்களுக்கும் ஏனைய உறவினர்களுக்கும் மற்றும் சமூகத்தினருக்கும் உதவுபவர்களாக விளங்குவர். அவர்களது தனிப்பட்ட முன்னேற்றத்திற்காக உழைக்கும் அதேநேரம் பிறருடன் நல்லுறவை விருத்தி செய்து கொள்ளவும் முயற்சிசெய்வர்.



உரு 7.11 குடும்பத்தினர் உணவு வேளையில்

மேலும் சனநாயக வாழ்க்கை முறையை விளங்கிக் கொண்டவர்கள், தமது அயலவர்களுடன் நட்புறவுடன் செயற்படுவதற்கு முற்படுவர். அயலவர்களின் சுகதுக்கங்களில் பங்கெடுத்துச் சமத்துவமாக செயற்படுவர். சமூகத்தின் அங்கத்தவர்களுடன் பிரச்சினைகள், முரண்பாடுகளை ஏற்படுத்தாது சகிப்புத் தன்மையுடன் வாழுவர். அத்துடன் உண்மையை உணர்ந்து கொள்வதற்கு உதவுபவர்களாகவும் விளங்குவர். சகல பிரச்சினைக்குரிய சந்தர்ப்பங்களின் போதும் நடுநிலையுடன் நடந்துகொள்வர். இவ்வாறான சனநாயகப் பண்புள்ளவர்கள் அயலவர்களை மதிப்பதற்கும் ஆதரிப்பதற்கும் பிறரின் ஆலோசனைகளை ஏற்றுச் செயற்படுவதற்கும் முயல்வர். இவ்வாறு சிறந்த பண்புகளைக் கொண்ட மனிதர்களையே நாம் ‘‘நற் பிரஜைகள்’’ என்று அழைக் கின்றோம்.


## ✶ பரஸ்பரம் சகிப்புத் தன்மையுடன் வாழுதல்

சமூகத்தில் நபர்களுக்கும், குழுக்களுக்கும் இடையே ஏற்படும் அநேக முரண்பாடுகள் பிறரது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமையினாலும் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்கள் சகிப்புத்தன்மை கொள்ளாமையாலுமே தோன்றுகின்றன. பிறரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்து ஆராய்ந்து பல பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். சகிப்புத்தன்மையினால் தனிப்பட்டோர் தமது கருத்துக்களை ஒளிவுமறைவின்றி வெளியிடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

சந்தேகங்களும் கருத்துகளும் முரண்படும் போது உண்மை மறைக்கப் படுகிறது. இதனால் சகிப்புத்தன்மையும் கருத்துக்களை ஏற்கும் பண்பும் இல்லாது போகின்றது. அத்துடன் தனிப்பட்டவர்களது கௌரவமும் சமூகத்தின் கௌரவமும் பாதிக்கப்படுவதற்கும் இது காரணமாக அமையலாம்.

### ✶ சமூகப்பாதுகாப்பை உறுதி செய்தல்

சனநாயகப் பண்புள்ள பிரசைகளிடத்தில் காணப்படக்கூடிய முக்கிய பண்புகளில் சமூகத்தின் பாதுகாப்பு குறித்து அக்கறை கொள்வதும் ஒன்றாகும். சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் தமது பாதுகாப்புக் குறித்து அக்கறையுடன் செயற்படுவது என்பது இயல்பானது. அது போன்றே சமூகத்தின் பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். தமது சமூகச் சூழலிலுள்ளவைகள் மற்றும் சமூகத்தில் வாழும் நபர்கள் தொடர்பாக அறிந்து வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய ஆபத்துக் களிலிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.




உரு 7.12

சமூக விரோதச் செயல்கள் நடைபெறுமாயின் அவை தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பது கடமையாகும். குறிப்பாக மக்கள் பிரயாணத்தின் போதும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறு சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் தம்மையும் தாம் சார்ந்துள்ள சமூகத்தையும் பாதுகாத்து உறுதிப்படுத்தும் வகையில் உழைக்க வேண்டியது அவசியமாகும்.

### ✶ தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிந்து நடத்தல்

சரியான தலைமைத்துவத்தை ஏற்று மதித்து நடப்பது சனநாயக வாழ்க்கை முறையின் மற்றொரு பண்பாகும். அந்தந்த இடங்களில் நடைபெறக்கூடிய கருமங்களை வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்குத் தலைமைத்துவம் அவசியமாகும். குடும்பம், பாடசாலை, சமூகம் என எல்லா இடங்களிலும் தலைமைத்துவம் காணப்படும். மாணவர்களாகிய நாம் தலைமைத்துவங்களை மதித்து நடப்பது கடமையாகும். வீட்டில் தந்தைக்கும், மூத்தவர்களுக்கும் கீழ்ப்படிவதுடன் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர் தலைவர்களுக்கும் கீழ்ப்படிவதன் மூலம் நிறைவான அனுபவங்களை நாம் பெறலாம்.

மேலும் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் குழுவாகச் செயற்படும் போது தலைமைத்துவம் வகிப்பதற்கும் அதன் கீழ்ச் செயற்படுவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. பாடசாலை மன்றங்கள், விளையாட்டு போட்டிகள் போது தலைவர், செயலாளர், பொருளாளர போன்ற தலைமைத்துவப் பயிற்சி பாடசாலைகள் மூலம் வழங்கப்படுகின்றது. ஒரு புறம் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்படுவதற்கும் மறுபுறம் தலைமைத்துவத்துக்குக் கீழ்ப்படிவதற் குரியதுமான பயிற்சிகள் பாடசாலையில் கிடைக்கின்றன.

மேற்படி எந்தச் செயற்பாடாயினும், அதனை நிறைவேற்றுவதற்கும், அவற்றில் வெற்றி காண்பதற்கும் தலைமைத்துவம் மிக மிக அவசியமாகும். தலைமைத்துவமின்றிச் சமூகத்தின் எந்தவொரு ஒழுங்கமைப்பும் குழுக்களும் செயற்படுவது கடினம். எனவே தலைமைத்துவப் பண்புகள் பிரசைகள் ஒவ்வொருவருக்கும் அவசியமானவை. அதன் மூலம் தான் தலைமைத்துவங்களை ஏற்றுச் செயற்படுத்தவும் அல்லது தலைமைத்துவத்துக்குக் கீழ்ப்படிந்து கட்டுப்பாட்டுடன் நடப்பதற்கும் வழிபிறக்கும்.

### செயற்பாடு V

01. "சனநாயக வாழ்க்கை மூலமே சிறந்த பிரசைகள் உருவாகின்றனர்" எனும் தலைப்பில் காலை ஆராதனைக் கூட்டத்தில் பேச்சு ஒன்றை நிகழ்த்துக.
02. சகிப்புத் தன்மையுடன் வாழுதல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு உதவுவதற்கான காரணம் ஆகும் விளக்குக.

### சாராம்சம்

- ❖ சனநாயக வாழ்க்கை முறையின் மூலம் சிறந்த சமூக அமைப்பை பேணலாம். அதனை உருவாக்கிக் கொண்டு செயற்படுவது ஒவ்வொரு பிரஜைகளினதும் பொறுப்பாகும்.
- ❖ சமூகம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு சனநாயகப் பண்புகள் நிறைந்ததாக அமைய வேண்டும்.
- ❖ சிறந்த ஆளிடைத் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமும், சுயகட்டுபாட்டுடன் வாழ்வதன் மூலமும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் மூலமும் சிறந்த சமூக வாழ்க்கையை அடையலாம்
- ❖ சனநாயகம் குடும்பத்திலிருந்து ஆரம்பித்து பாடசாலை மற்றும் சமூக நிறுவனங்களுக்கு விரிவடைந்து முழுமை பெறுகிறது.
- ❖ சமூகத்தின் எதிர்காலப் பிரஜைகளான சிறுவர்கள் போஷித்துப் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களது உரிமைகளும் உறுதி செய்யப்பட வேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் உரிமைகளைப் பெறுவதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவது சமூகத்தவர்களின் பொறுப்பாகும்.